# DEPOSITION OF WITNESS

## (Chapter XXIII Code of Criminal Procedure)

## IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE THIRUVIDAIMARUTHUR

| | | | |
|---|---|---|---|
| Calender | : | | |
| Miscellaneous | : | | |
| Preliminary Register | : CC 94/2020 | | |
| Sessions | : | | |
| Deposition of Witness for | : LW-6/PW- 6 | Village: | |
| Name | : பாரதிதாசன், காவல் | Age | : |
| உதவி ஆய்வாளர். | | Taluk | : |
| Father's/Husband's Name | : | | |
| | | Religion | : |
| Nationality | : Indian | | |

**Solemnly affirmed in accordance with the provisions of The Oaths Act 1969 on the day of 29/11/2023**

சாட்சியை திருவிடைமருதூர் தலைமை காவலர் திருமதி ரமா என்பவர் அடையாளம் காட்டி முன் நிறுத்தியவரை சத்தியபிரமாணம் செய்து முதல் விசாரணை பதியப்படுகிறது.

**1 முதல் 8 எதிரிகள் ஆஜரில் இருந்தார்கள்.**

**<u>முதல் விசாரணை</u>**:

நான் தற்போது தஞ்சாவூர் மாவட்டம் சிறப்பு நுண்ணறிவு காவல் பிரிவில் உதவி ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். கடந்த 13/02/2015 ம் தேதி இரவு 09.30 மணியளவில் திருவிடைமருதூர் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக நிலைய பொறுப்பில் இருந்தபோது, ஏற்கனவே திருவிடைமருதூர் காவல் நிலைய சிறப்பு உதவி ஆய்வாளர் ஆதிகேசவன் என்பவர் பிள்ளையாம்பேட்டையை சேர்ந்த ரங்கசாமி மகன் பாலு நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்று, நிலைய சமுதாய பணிப்பதிவேடு மனு ரசீது எண்.36/2015 வழங்கி எனது பார்வைக்கு வைத்த கோப்பினை பார்வையிட்டு நிலைய குற்ற எண். 67/2015 ல் சட்டபிரிவுகள் 147, 148, 448, 294(b),506(2) மற்றும் தமிழ்நாடு பொதுசொத்துக்களுக்கு சேதம் விளைவித்தலை தடுக்கும் சட்டம் பிரிவு 3(1)ன் படி

வழக்கு பதிவு செய்து அச்சு முதல் தகவல் அறிக்கை தயார் செய்தேன். (**மேற்படி முதல் தகவல் அறிக்கை அ.த.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). பின்னர் வழக்கு கோப்பினை மேல்விசாரணைக்காக ஆய்வாளர் பார்வைக்கு வைத்தேன். ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

<u>**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**</u>

1. இவ்வழக்கில் முதல் தகவல் அறிக்கை நான் தான் பதிவு செய்தேன் என்றால் சரிதான். இவ்வழக்கில் 5 ம் எதிரியின் மகன் செல்வம் இறந்த தேதியில் சம்பவம் நடைபெற்றதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். செல்வம் என்பவர் பக்கத்து வீட்டுக்காரர் தாக்கியதால் தான் இறந்துவிட்டார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அ.சா.1 பாலு அளித்துள்ள புகார் மனுவில் 06/07/2014 ம் தேதி செல்வம் என்பவர் இறந்துபோன நாளில் தனது வீட்டை அடித்து உடைத்துவிட்டதாக குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான். செல்வத்தின் இறப்பு சான்றிதழை இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

2. சம்பவம் நடைபெற்றதாக சொல்லப்படும் இடத்திற்கும், எங்கள் காவல் நிலையத்திற்கும் இடையே எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் சுமார் 7 கி.மீ தூரம் இருக்கும். வாகனத்தில் சென்றால் சுமார் 10 நிமிடத்தில் சென்றுவிடலாம் என்றால் சரிதான். புகார் மனுவில் 06/07/2014 ம் தேதி சம்பவம் நடைபெற்றதாக கூறப்பட்டுள்ளது என்றால் சரிதான். 08/02/2015 ம் தேதி புகார் அளிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கை 13/02/2015 ம் தேதி பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். காலதாமதமாக புகார் அளிக்கப்பட்டுள்ளதற்கு முதல் தகவல் அறிக்கையில் காரணம் எதுவும் கூறப்பட்டுள்ளதா என்றால் மனு ரசீது வழங்கி விசாரணை செய்யப்பட்டது. செல்வம் என்பவர் உண்மையில் 27/05/2017 ம் தேதி தான் இறந்துள்ளார் என்றாலும், அதே தேதியில் அவர் கொலை செய்யப்பட்டதாக எங்கள் காவல் நிலையத்தில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது என்றாலும் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி விவரத்தை தெரிந்து கொண்டே எதிரிகள் மீது பொய்யாக வழக்கு பதிவு செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u>** இல்லை

என் முன்னால் எதிரியின் முன்னிலையில் சாட்சியம் அளிக்கப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக்காட்டப்பட்டு சரியானதென்று ஏற்கப்பட்டு கையொப்பம் செய்தார்.

**ஒப்பம்(நா.சிவபழனி)**
**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**திருவிடைமருதூர்.**